1971 அக்டோபர் 23]

(இ) அரசு ஒப்புதல் பெற்றவுடன் திட்டத்திற்கான வேலை தொடங்கப்படும்.

திரு. ந. நாச்சியப்பன்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் ஆரம்பித்து 5-6 ஆண்டுகள் ஆவதால் விரைவில் துவங்குவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிதி நிலைமை அனுசரித்து வேலை துவங்கப்படும்.

Assistance to self-employment seekers

*41 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Co-operation be pleased to state:

(a) whether the Co-operative Land Development Bank, Tamil Nadu has programmed to assist self-employment seekers; and மு.ப. 9-30

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(இ) இந்த வினாவிற்கு இடமில்லை.

Thiru K. M. SUBRAMANIAM: Is there any other State financial institution that finances or that proposes to finance the self-employment seekers within the State?

The Hon. Thiru Si. Pa. ADITANAR: Sir, the nationalised banks, fourteen of them, have got......(Thiru K. M. SUBRAMANIAM: Under the control of this State). What I desired to say is this. The nationalised banks have some scheme, but if the hon. Member requires information on that, then I can secure the information from the Central Government and furnish it to him. In so far as this State is concerned, there is no such scheme in the co-operative sector.

Thiru K. M. SUBRAMANIAM: My question is, whether there is any financial institution under the control of the Tamil Nadu Government proposing to finance the self-employment scheme? Everybody knows about the nationalised banks.

The Hon. Thiru Si. Pi. ADITANAR: Urban Co-operative Banks or Central Co-operative Banks are giving financial assistance to those who set up small business of their own and the amount advanced by the Urban Bank or the Central Bank is re-financed by the Industrial Development Bank of India.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, தேசியம் ஆக்கப்பட்ட பாங்குகள் பற்றிச் சொன்னார்கள். அந்த பாங்குகள் சிறு தொழில்களுக்கும், செல்ப்-எம்ப்ளாய்மெண்டுக்கும் கொடுக்கும் கடன்கள் பற்றி தமிழக அரசைக் கலந்துக் கொள்கிறார்களா? நம்முடைய அரசு ஆலோசனைகள் கொடுக்கிறார்களா? தமிழக அரசின் உதவிகள், தேசியமாக்கப்பட்ட பாங்குகளின் உதவியோடு எந்த அளவுக்கு இணைக்கப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, மூன்று தாலூக்காக்களில், சேலம் மாவட்டத்தில் ஓமலூர் தாலூகா, நெல்லை மாவட்டத்தில் நாங்குனேரி தாலூகா, செங்கல்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புத்தூர் தாலூகா, ஆகிய இந்த மூன்று தாலூகாக்களிலும், ரூரல் இண்டஸ்ட்ரியல் ப்ராஜக்ட் என்று இருக்கிறது. அதிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மத்திய அரசின் பாங்குகளுக்கு சிபாரிசு செய்யக் கூடிய அதிகாரம் இருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் கூட்டுறவு நிலவள வங்கிகள் நிலத்தை வளப்படுத்த கடன்கள் கொடுக்கிறார்கள். நிலவளம் சம்மந்தப்பட்ட தச்சுத் தொழில் இருக்கிறது. அதற்கும் உதவிசெய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, நிலவள வங்கிகள் மூலம் தச்சுத் தொழில், இரும்புத் தொழில் இவற்றிற்கு உதவி கொடுக்கப்படுவதில்லை. அர்பன் பாங்குகள் இருக்கின்றன. சென்ட்ரல் பாங்குகள் இருக்கின்றன. அவைகள் மூலம் உதவிகள் கொடுக்க வேண்டும் என்று திட்டம் வகுத்து, செயல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. துரை முருகன் : இப்படிப்பட்ட நிலவள வங்கிகள் பல ஒன்றியங்களில் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறதே. எப்பொழுது ஆரம்பிப்பார்கள் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஒன்றியங்கள் எல்லாவற்றிலும் ஒரு சிலவற்றைத் தவிர கிளைகள் தொடங்க ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. அதற்கான மூலதனம் ரிசர்வ் பாங்கியிலிருந்து வரவேண்டும். அதில் தடை இருப்பதால், காலதாமதம் ஏற்படுகிறது.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, நிலவள வங்கிகள் மூலம் தேயிலைத் தொழிலுக்கு கொடுக்கப்பட்ட கடன் தொகையில், ஐந்தாவது தவணை கொடுக்கப்படாமல் இருக்கிறது. உடனடியாகக் கொடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நிலவள வங்கியில் தடை இருந்தால், உறுப்பினர் அது பற்றித் தெரிவித்தால், மாநில வங்கி மூலம் கேட்டு அறிந்து பதில் சொல்ல முடியும்.

Chingleput District Co-operative Supply and Marketing Society

* 42 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether any representation has been made to Government by some of the Directors regarding serious irregularities and mal-administration in the working of the Chingleput District Co-operative Supply and Marketing Society Limited, Madras, since January 1969;

(*b*) whether the High Court of Judicature of Madras by a Bench in one case and another by a single Judge passed strictures on the Co-operative Deputy Registrar-Secretary of the above Society; and